DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 611/2022 PW : **1**

Name : உஷா Age – 64

W/o. : வேனுகோபால் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date:10.02.2026

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) தாவாவில் நான் என் தாயார் தாவா நிலத்தில் விளைந்த பொருட்களை அவர் இறக்கும் வரை அவர் எனக்கு கொடுத்து வந்தார் என்று தாவா 4வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. தாவா நிலங்கள் காலியாக தான் இருந்தது. என் தாயார் இருக்கும்போது அதில் தயிலை மரங்கள் இருந்தன. 2015 திலும் தயிலை மரம் இருந்தன. எப்போது தயிலை மரங்கள் வைத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அந்த தயிலை மரங்கள் இடைப்பட்ட காலத்தில் வெட்டபபட்டது ஆனால் குறிப்பிட்டு எந்த தேதியில் வெட்டப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அவ்வாறு எந்த வித தயிலை மரம் கிடையாது என்றாலும் தற்போது அந்த இடம் காலியாக இருக்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் சார் பதிவாளர் அலவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள் எப்போது எடுத்தேன் என்ற விபரம் என்னால் தேதியிட்ட சொல்ல இயலாது. என் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் வரை அவர்கள் வீட்டிற்கு நான் சென்று கொண்டிருந்து தான் இருந்தேன். பிரதிவாதி தனியாக தான் இருந்தார்.

2) என் தந்தையின் காரியத்தில் நான் வந்த போது சொத்துக்களை பிரதிவாதிகளுக்கு பெயருக்கு மாற்றியதால் நான் அங்கு தகராறு செய்தேன் என்று சொன்னால் அப்போது மாற்றப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. என் தந்தை 2015 இருக்கும் வரை நல்லபடியாக தான் அரிசி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். 2012 ம் ஆண்டு எந்த தந்தை நல்ல மன நிலையில்

தான் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அப்போது என் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை. ஞாபகம் மறதி இருந்தது. அவ்வாறு அவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு நான் எந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவாவிலும் இது சம்மந்தமாக குறிப்பிட்டு சொல்லவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியும், ஆனால் எழுத தெரியாது. வா.சா.ஆ.1, 2 நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பட்டா. வா.சா.ஆ.1, 2-ல் ஆவணம் சம்பத் பெயரில் உள்ளது என்றால் சரிதான் அவ்வாறு மாற்றி எழுதியுள்ளார்கள். வா.சா.ஆ.1, 2, 6 ஆவணத்தை ரத்து செய்ய கோரி நான் வருவாய் துறையில் ஆவணங்கள் எதுவும் சமர்பித்துள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வா.சா.ஆ.1, 2, 6 ஆவணத்தை ரத்து செய்ய கோரி நான் நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தற்போது தான் தாக்கல் செய்துள்ளேன்.

3) தற்போது வரை தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவித்தில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் முறையில்லாமல் செய்து வைத்துள்ளார். என் தந்தை உயிருடன் இருக்கும் போது பிரதிவாதிக்கு அவர் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த விபரம் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த போது நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது இருந்த தாழ்புணர்ச்சி காரணமாக எல்ல விவரங்களை தெரிந்தே நான் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் 2019 ஆண் காலமானார். அவரின் இறுதி சடங்கிற்கு பிரதிவாதி வந்து சென்றார் என்றால் சரிதான். அனைத்து விவரங்கள் தெரிந்து நான் வேண்டுமென்றே வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.10 17:49:02 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.